நாள்: 03.04.2025
OS.260/2020
பெயர் லதா
வா.சா.3

**<u>குறுக்கு விசரணை</u>**

நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க எனக்கு அழைப்பாணை எதுவும் வரவில்லை. எனது மருமகன் வாதியிடம் ரூ6 லட்சம் மணிகண்டனும் அவரது மனைவி ரோகமணி கடன் வாங்கியிருந்தார்கள். அது எனக்கு நேரடியாக தெரியும் என்பதால் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். வாதி எனது மகளை திருமணம் செய்த மருமகன் என்றால் சரிதான். எனக்கு எழுத படிக்க தெரியாது. 02.07.2017 ல் நடந்த வரவு செலவு சம்மந்தமாக தான் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். வாசாஆ 1 புரோநோட்டில் 6 என்கிற எண்ணால் ஆன எழுத்த திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புரோநோட்டை இராயப்பன்பட்டியைச் சேர்ந்த சவரிமுத்து என்பவர் எழுதினார். புரோநோட்டை முழுமையாக சவரிமுத்து தான் எழுதினார். மணிகண்டன் பணத்தை வாதியிடம் வாங்கிக்கொண்டு படித்துப் பார்த்து கையெழுத்துப் போட்டு அதன் பின்பு தேதி போட்டார். நான் சொல்வது போல் என் முன்பு பிரதிவாதி பணம் பெற்றுக்கொண்டு வழக்கு புரோநோட்டை எழுதிக்கொடுக்கவில்லை என்றும், எனக்கு புரோநோட்டைப் பற்றியே தெரியாது என்றால் சரியல்ல. புரோநோட்டில் உள்ள கையொப்பம் பிரதிவாதியினுடையது அல்ல என்றும், என் மருமகன் மோசடியாக உற்பத்தி செய்த புரோநோட்டில் நான் கையெழுத்து போட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையில் ரோகமணி கடன் வாங்கியிருந்தால் அவரிடம் வாதி ரெவின்யூ ஸ்டாம்பு மீது தான் கையொப்பம் பெற்றிருப்பார் என்றும், கடன் வாங்கவில்லை என்பதால்தான் சாட்சி கையெழுத்து போட்டதாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வாதி என் மருமகன் என்பதால் அவருக்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.